# இந்தியா ஃபௌண்டேசன் ஃபார் தி ஆர்ட்ஸ்
# (India Foundation for the Arts – IFA)
# கலை ஆய்வுத் திட்டம் (Arts Research Programme)

விண்ணப்பங்கள் கோரல்

**விண்ணப்பிக்கக் கடைசி நாள்: ஆகஸ்ட் 10, 2026**

*விண்ணப்பங்கக்கான அழைப்பினை பிற இந்திய மொழிகளில் வாசிக்க,*
*இங்கே சொடுக்கவும்.*

*2025-ஆம் ஆண்டு மீளத் துவங்கப்பட்ட ஐ.எஃப்.ஏ.(IFA)-வின் கலை ஆராய்ச்சித் திட்டம் கலை ஆய்வுகளில் நிலவும் பன்மையும், நெகிழ்வுத்தன்மையும் கொண்ட அணுகுமுறைகளின் மதிப்பினை அங்கீகரிக்கிறது. நாங்கள் இத்திட்டத்தின்கீழ், படைப்பு, புலமை மற்றும் கலாசார செயல்முறைகளில் அடங்கியுள்ள சிந்தனை மற்றும் அறிதல் வடிவங்களைக் குறித்த ஆய்வுகளை மேற்கொள்கிறோம். இந்திய கலைச்செயல்பாடுகளின் வரலாறு மற்றும் வெளிப்பாடுகளைக் குறித்த பல்வேறுபட்ட பார்வைகளை வெளிகொணர்வதன் மூலம், இந்திய கலைகள் குறித்த அழ்ந்த புரிதலை விசாரணை, ஊடாட்டம், பரிசீலனை, பரிசோதனை ஆகியவற்றினூடாக உருவாக்குகிறோம்.*

*இத்திட்டத்தில் கலை ஆய்வு என்பது பின்வருமாறு புரிந்துகொள்ளப்படுகிறது:*

- *புதிய வழிகளில் கலை ஆய்வுகளை செய்யும், வரையறுக்கும், பரவலாக்கும் செயல்முறை வடிவங்களை உருவாக்குதல். எது எவ்வாறு ஆய்வுக்குரிய முக்கியத்துவமுடையது, யார் ஆய்வு செய்யலாம் என்பன போன்ற வரையறைகளை கேள்விக்குட்படுத்தும், ஆவணப்படுத்துதலைக் கடந்த பரிசோதனைகளை உருவாக்கும் ஆய்வுகளை ஊக்கப்படுத்துகிறோம்.*

- *உடல், தொழில்நுட்பம், தனிநபர் கதையாடல்கள், நினைவுகள், அனுபவங்கள், உறவுகள், கற்பனைகள் ஆகியவற்றின் ஊடாக தனித்துவமிக்க அறிதல் மற்றும் சிந்தனை மூலம் புதிய*

கருத்தாக்கப் பரப்புகளைக் கண்டடையும் முறையியலை புத்துருவாக்குதல்.

- ஒருவரது படைப்பு, கலை, கலாசார செயல்பாடுகளை நேரடி ஆய்வுக்கு உட்படுத்துதல். தனி நபர்கள் தங்களது அல்லது மற்றொருவரது படைப்புச் செயல்முறை குறித்த ஆர்வமிக்க, விமர்சனபூர்வமான, முன்னோக்கியதான சுயபரிசீலனை கொண்ட ஆய்வுச் செயல்பாடுகளை மேற்கொள்வதை ஊக்குவித்தல்.

- நிலவுகின்ற கதையாடல்கள், பிரதிநிதித்துவம் செய்யப்படும் முறைகள் ஆகியவற்றைக் கேள்விக்குட்படுத்தும், வரலாறு, கலாசார பாரம்பர்யம், கலைச்செயல்பாடுகளின் வெளிப்பாடுகள் ஆகியவற்றைக் குறித்த பன்முகப் பார்வைகளை வழங்கும் ஆய்வுகள். இவ்வகை ஆய்வுகளை சமூகக் குழுவினரின் ஈடுபாடு, கலை மற்றும் தொடர்புடைய புலங்களின் வரலாறு, எதிர்கால நோக்கில் கலைச்செயல்பாடுகள் எவ்விதம் மாற்றமடையும் என சிந்தித்தல் ஆகிய வடிவங்களைச் சார்ந்ததாகப் பார்க்கலாம்.

- புதிய மொழி, சொல்வளம், உள்ளூர் ஆற்றல்களை வளர்த்தெடுத்தல் ஆகியவற்றிற்கு வகை செய்யக்கூடிய விளிம்பு நிலைக் குரல்களை ஒலிக்கும் வழிவகைகள், இவை மேலாதிக்கம், விளிம்பு நிலை ஆகியவை கட்டமைக்கப்படுவது எவ்வாறு என்றும் பரிசீலிக்கலாம்.

- ஓர் உரையாடல் செயல்பாடு. கலைகளுக்கும் பிற அறிவுத்துறைகளுக்கும் இடையில் அர்த்தபூர்வமான பரிமாற்றத்தை தோற்றுவிக்கும் ஆய்வுகளை நிகழ்த்த விரும்புகிறோம் (உதாரணமாக கலைக்கும் அறிவியலுக்கும், கலைக்கும் தத்துவத்திற்கும், கலைக்கும் டிஜிட்டல் மீடியாவிற்கும், கோட்பாடுகளுக்கும் செயல்முறைகளுக்கும் இடையிலான உரையாடல்கள்). கலை மற்றும் ஆய்வுச் செயல்பாடுகளுக்கும், கோட்பாடு, கலாசாரம், உடல்கள் மற்றும் தொழில்நுட்பங்கள் ஆகியவற்றிற்கிடையேயும் புதிய வடிவிலான இணைவுகள் மற்றும் ஒத்திழைப்பினை நோக்கிய

தேடல் கொண்ட ஆய்வுகளை ஆதரிக்க ஆர்வத்துடன் உள்ளோம்.

➔ ஆய்வை வளப்படுத்தும் மொழிபெயர்ப்புச் செயல்பாடு. மொழிபெயர்ப்புப் பயிற்சி குறித்த சொல்லாடல்கள், பன்மொழிசார் அணுகுமுறைகள் தொடர்பான பரிசோதனை முயற்சிகள், மொழிபெயர்ப்பின் பண்பாட்டு விழுமியங்களை, மதிப்பீடுகளை ஆராய்தல் உள்ளிட்டவை தொடர்பான ஆய்வு முன்வரைவுகளையும் (proposal) ஊக்குவிக்கிறோம்.

**மேற்குறித்த கருப்பொருள்கள் தவிர, கலை ஆய்வுப் பரப்பினை விரிவுபடுத்தும் முன்வரைவுகளும் வரவேற்கப்படுகின்றன.**

**திட்டத்தின் கால அளவு:**
*குறைந்தது ஒருவருடம் முதல் அதிகப்படியாக 18 மாதங்கள் வரை*

**நிதியாதாரம் (Budget):**
*நீங்கள் திட்டத்திற்கான நிதியாக அதிகப்படியாக ரூபாய் 5,00,000/- வரை கோரலாம். நீங்கள் மொத்த நிதியில் 35%க்கு மிகாமல்* மதிப்பீட்டுத்தொகை (honorarium) கோரலாம். *(செலவினங்களில்* நிறுவனம் சார்ந்த அலுவலகச் செலவினங்கள் (institutional overheads), கட்டிடச் செலவினங்கள் அல்லது உட்கட்டமைப்பு வளர்ச்சி (infrastructural development) போன்றவற்றைத் தயைகூர்ந்து சேர்க்க வேண்டாம். தொழில் நுட்பக்கருவிகள் வாங்குவதை ஐ.எஃப்.ஏ. அனுமதிப்பதில்லை. ஆனால், உங்களின் வேலைத்திட்டத்தின் பொருட்டு நீங்கள் தொழில்நுட்பக் கருவிகளை வாங்க வேண்டியிருந்தால், அவற்றை வேலைத்திட்டம் முடிந்தவுடன் ஐ.எஃப்.ஏ.விடம் ஒப்படைக்க வேண்டும்.)

**யார் யாரெல்லாம் விண்ணப்பிக்கலாம்?**
புலமையாளர்கள், பயில்வுநிலை ஆய்வாளர்கள் (practitioner researchers), கலைஞர் – செயற்பாட்டாளர், எடுத்தாளுநர் (curators), மொழிபெயர்ப்பாளர்கள், கலைஞர் – பயிற்றுநர், எழுத்தாளர்கள், மெய்யியலாளர்கள், கேமர்ஸ் (gamers) அல்லது ஆய்வு மற்றும் செயல்முறைகளின் ஊடாட்டத்தில் தங்களை இருத்திக்கொள்ள விரும்பும் **எவரும்** விண்ணப்பிக்கலாம்.

**விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதற்கான வழிகாட்டுதல்கள்:**

- உங்களின் இறுதித் திட்ட முன்வரைவை அனுப்பவதற்கு முன்னதாக அது தொடர்பான சந்தேகங்களையும் கேள்விகளையும் எங்களுடன் விவாதிக்க, அவற்றை எங்களின் கலை ஆய்வுத் திட்ட அலுவலரான ஹர்ஷிதா பத்வாலின் **harshita@indiaifa.org** என்ற மின்னஞ்சல் முகவரிக்கு, **Project Proposal for Arts Research** என்ற தலைப்பிட்டு, ஜூலை *11, 2026*க்கு முன்னர் அனுப்ப வேண்டுகின்றோம்.
- உங்களின் திட்ட முன்வரைவுகளை ஆங்கிலம் உட்பட எந்த இந்திய மொழியிலும் எழுதலாம்.
- ஆய்வுக் கேள்விகள், நோக்கங்கள், (இத்திட்டம் தொடர்பான உங்களின்) தனிப்பட்ட ஈடுபாடு, இந்த ஆய்வுத்திட்டத்தில் பங்கெடுக்கும் பிற பங்கேற்பாளர்கள் விவரம் போன்றவற்றில் நீங்கள் முன்வைக்கும் திட்ட முன்வரைவு தெளிவைக் கொண்டிருக்க வேண்டும்.
- ஆய்வின் விளைபொருட்கள் பொதுவெளியில் பகிர்ந்து கொள்ளக்கூடிய வெளிப்பாட்டு வடிவங்களைக் கொண்டதாக இருக்கும்படியான எண்ணங்கள், கருத்துருக்களை வளர்த்தெடுக்க வேண்டுகின்றோம். இவை பனுவல் (textual), காட்சி (visual), நிகழ்த்துகை (performative), எடுத்தாளுகை செய்தல் (curatorial), கற்பித்தல் (pedagogical), வெளி (spatial), பருப்பொருள் (material), ஆவணம், ஒலி (sonic), டிஜிட்டல் (digital) போன்ற வெளிப்பாட்டு வடிவங்களாக அல்லது வேறு ஏதேனும் பண்பாட்டு வெளிப்பாடாக, இடையீடாக அமையலாம். ஆய்வு முடிவுகள் பலபடித்தான பார்வையாளர்களைச் சென்றடையும் வகையில் இலகுவானதாகவும் அர்த்தமுடையதாகவும் இருக்க வேண்டும்.
- உங்களின் இறுதி ஆய்வுத் திட்ட முன்வரைவை உங்களின் சுய விபர விவரணை (CV), பெறப்படும் நிதி எவ்வாறு பயன்படுத்தப்படும் என்பன தொடர்பான விபரங்களைத் தரும் வகையிலான வரவுசெலவுத் திட்ட விவரங்கள் ஆகியவற்றுடன், இணைய வழியாக, 25MBக்கு மிகாமல் ஒரே மின்னஞ்சலில் **harshita@indiaifa.org** என்ற மின்னஞ்சல் முகவரிக்கு, ஆகஸ்ட்

10, 2026, பின்னிரவு நேரம் 11.59க்கு (IST) முன்னர் அனுப்ப வேண்டுகின்றோம்.

**விண்ணப்பிப்பதற்கான தகுதி வரம்பு**

- இந்திய குடிமக்கள் மட்டுமே விண்ணப்பிக்க முடியும். இதில் இந்திய வம்சாவளியினரும் இந்திய வெளிநாட்டுக் குடியுரிமை அட்டை வைத்திருப்பவர்களும் அடங்கமாட்டார்கள்.
- விண்ணப்பதாரர்கள் பான் கார்டும் அடையாள மற்றும் குடியுரிமைக்கான சான்றுக்குப் பின்வருவனவற்றில் ஏதேனும் ஒன்றை வைத்திருக்க வேண்டும்: இந்திய பாஸ்போர்ட் அல்லது ஆதார் அட்டை அல்லது இந்திய வாக்காளர் அடையாள அட்டை
- தனிநபர்கள் மட்டுமே விண்ணப்பிக்க முடியும். எந்த வகையான நிறுவனங்களும் விண்ணப்பிக்க முடியாது.
- திட்டங்களில் ஒத்துழைப்பாளர்கள் இருந்தால் அவர்களும் இந்தியக் குடிமக்களாக இருக்க வேண்டும்.
- ஐ.எஃப்.ஏ. உடனான நிதிக் குற்றங்களின் கடந்தகால வரலாற்றைக் கொண்ட நபர்கள் தகுதியற்றவர்கள்.
- முந்தைய நிதிநல்கையில் ஒப்புக்கொள்ளப்பட்ட அளிக்கைகளை (deliverables) ஐ.எஃப்.ஏ.வில் அளிக்கத் தவறியவர்கள் தகுதியற்றவர்கள்.
- எந்தக் காரணத்திற்காகவும் எதிர்காலத்தில் ஐ.எஃப்.ஏ.வின் வேலைத்திட்டங்களுக்கு விண்ணப்பிக்கக்கூடாது என ஐ.எஃப்.ஏ.விடமிருந்து கடிதம் பெற்றவர்கள் தகுதியற்றவர்கள்.
- கூட்டுக் கணக்கு வைத்திருந்தால் ஒன்றுக்கு மேற்பட்ட தனிநபர்கள் விண்ணப்பிக்கலாம். அவர்கள் இல்லாவிட்டால், அவர்களில் ஒருவர் மட்டுமே விண்ணப்பிக்க இயலும். மற்றவர்கள் ஒத்துழைப்பாளர்களாக இருக்கலாம்.

**தேர்வு செய்யப்படும் முறை:**

ஒரு புறத்தேர்வாளர் குழுவினர் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆய்வுத் திட்ட முன்வரைவுகளை மதிப்பீடு செய்வர். விண்ணப்பதாரர்கள் இக்குழுவினரிடம் தங்களின் திட்டம் குறித்து எடுத்துரைக்க

வேண்டியிருக்கலாம். வேலைத்திட்டங்களைத் தெரிவு செய்வதில் ஐ.எஃப்.ஏ.வின் முடிவு இறுதியானது.

முழுமையடையாத திட்ட முன்வரைவுகளும் விண்ணப்பிக்கும் தகுதிநிலை இல்லாதவர்களின் முன்வரைவுகளும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என்பதைத் தயைகூர்ந்து கவனத்தில் கொள்ளவும்.

தேர்ந்தெடுக்கப்படும் அனைத்து ஆய்வுகளும் ஐ.எஃப்.ஏ.வினால் செயல்படுத்தப்படும்.

**முக்கிய நாள்கள்:**

ஆய்வுத் திட்டம் குறித்த கருத்துகள், சந்தேகங்கள், கேள்விகள் போன்றவற்றை எங்களுடன் விவாதிக்கக் கடைசி நாள்: **ஜூலை 11, 2026.**

ஆய்வுத் திட்ட முன்வரைவைச் சமர்ப்பிக்கக் கடைசி நாள்: **ஆகஸ்ட் 10, 2026**

தேர்ந்தெடுக்கப்பட்ட திட்ட முன்வரைவுகள் அறிவிக்கப்படும் காலம் **நவம்பர் 2026.**

தேர்ந்தெடுக்கப்பட்ட ஆய்வுத் திட்டங்கள் துவக்கப்படும் காலம்: **ஜனவரி 2027** (மாறுதலுக்கு உட்பட்டது)

**பல்வேறு இந்திய மொழிகளிலும் சொல்லாடல்களுக்குப் பங்களிக்கும் நோக்கில், ஆங்கிலம் உட்பட, எந்த இந்திய மொழியிலும் உங்கள் ஆய்வுகளை மேற்கொள்ள ஐ.எஃ.ப்.ஏ ஊக்கப்படுத்துகினறது.**

**குழந்தைகள் உட்பட அனைவரையும் ஆதரிக்கக்கூடிய, மதிக்கக்கூடிய, பாதுகாக்கக்கூடிய பாதுகாப்பான சூழலை உருவாக்குவதில் ஐ.எஃப்.ஏ. உறுதி பூண்டுள்ளது என்பதைத் தயவுசெய்து கவனத்தில் கொள்ளவும். விண்ணப்பதாரர்கள் இந்நோக்குடன் ஒத்துப்போக வேண்டும் என்பதோடு எப்போதும் அதைக் கடைப்பிடிக்கவும் வேண்டும்.**